செய்தி வெளியீடு எண்: 799 நாள்:28.10.2020

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (28.10.2020) தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கோவிட்–19க்கு எதிரான 33 எண்ணிக்கையிலான மக்கள் இயக்க விழிப்புணர்வு விளம்பர வாகனங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, 7 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் கோவிட்–19 தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டினை வெளியிட்டு, கோவிட்–19 தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 8.10.2020 அன்று, கோவிட்–19க்கு எதிரான மக்கள் இயக்கத்தினை நாடு முழுவதும் தொடங்கி வைத்து, கோவிட்–19க்கு எதிரான போராட்டத்தில் அனைவரும் இணைய வேண்டுகோள் விடுத்தார்கள். ‘‘முகக்கவசம் அணிய வேண்டும், கை கழுவ வேண்டும், தனி மனித இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும், 6 அடி தூர இடைவெளி நடைமுறையை பின்பற்ற வேண்டும்’’ என்று வலியுறுத்தியுள்ள மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், நாம் ஒன்றாக வெற்றி பெறுவோம், கொரோனாவை வெல்வோம் என கூறியுள்ளார்.

தமிழகத்தில் கோவிட்–19 தொற்று பரவலைத் தடுக்கும் பொருட்டும், மக்களிடையே கோவிட்–19 தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் கொரோனா தொற்று தொடர்பான அரசின் செய்தி குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் வெளியிடப்பட்டு வருகிறது. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் மற்றும் குணமடைந்தோரின் புள்ளி விவரங்கள் தினசரி அறிக்கையாக வெளியிடப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொரோனா தடுப்பு

தொடர்பான வேண்டுகோள், தொலைக்காட்சிகளிலும் மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழிப்புணர்வு வேண்டுகோள் குரல் அழைப்புகளாகவும், குறுஞ்செய்திகளாகவும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவலை தடுப்பது குறித்து பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ‘‘மக்கள் செய்யக் கூடியது மற்றும் செய்யக்கூடாதது’’, ‘‘தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்’’, ‘‘தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான மனநல ஆலோசனை’’, ‘‘அறிந்து கொள்ளுங்கள்’’ உட்பட 24 தலைப்புகளில் துண்டு பிரசுரங்கள் மற்றும் மடிப்பேடுகள் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சி / நகராட்சியை ஒட்டியுள்ள மக்கள் தொகை அதிகமாக உள்ள ஊராட்சி பகுதிகளில் வீடுதோறும் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதேபோல, மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் மக்களுக்கு காவல் துறை வாகனம் மற்றும் ஆட்டோக்கள் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் கலைக்குழுவினர் மூலம் கொரோனா குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோள், மருத்துவர்கள் மற்றும் காவல்துறையினர் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோள், பொதுமக்களுக்கு வேண்டுகோள், மூத்த குடிமக்களுக்கான அறிவுரை, தொழிற்சாலை / அலுவலகங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், கடைகள் / மீன் மார்கெட்களில் தனி மனித இடைவெளியை பின்பற்றுவதின் அவசியம், வீட்டில் தனிமைப்படுத்துல் – செய்யக்கூடியது செய்யக்கூடாதது, பொதுமக்களுக்கு கொரோனா நோயாளியின் அறிவுரை, முகக்கவசம் அணிதலின் அவசியம், அடிக்கடி கை கழுவுதல் மற்றும் தனி மனித இடைவெளியை கடைபிடித்தலின் அவசியம் போன்ற கொரோனா தொடர்பான 54

விழிப்புணர்வு குறும்படங்கள் / குறும்பாடல்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுகாதாரத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளால் தயாரிக்கப்பட்டு, அனைத்து தொலைக்காட்சி சேனல்களுக்கும், தனியார் உள்ளூர் சேனல்களுக்கும் வழங்கப்பட்டு தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்று கோவிட்–19க்கு எதிரான 33 எண்ணிக்கையிலான மக்கள் இயக்க விழிப்புணர்வு விளம்பர வாகனங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 7 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

மேலும், கோவிட்–19 தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களும் பெற்றுக்கொண்டார்கள். மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் எல்.இ.டி. விளம்பர வாகனத்தில் ஒளிபரப்பட்ட கோவிட்–19 தொடர்பான விழிப்புணர்வு குறும்பாடல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று பார்வையிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, கோவிட்–19 தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப

நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**